RTROP.NO.209/2022. –04.02.2025

CW1 – தங்கமணி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட கிராமத்தில் எனக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்றால் 6–1/2 ஏக்கர் நிலம் உள்ளது. அது 3 சர்வே எண்களில் உள்ளது. அந்த சொத்து பூர்வீக சொத்தா என்றால் அது என் கணவருக்கு பூர்வீக சொத்து. என் கணவர் இறந்துவிட்டார். என் கணவருடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் ஒரே மகன்தான். சொத்தானது என் மாமனாரும் என் மாமானருடன் பிறந்த சகோதரர்களும் பாக பிரிவினை செய்து கொண்டதில் என் கணவர் அப்பு என்கிற பழனியப்பனுக்கு பாகமாக பிரிந்த நிலம் ஆகும்.

பாகபிரிவினை பத்திரத்தில் அனைத்து நிலங்களும் புஞ்சை விவசாய நிலமாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் விவசாய நிலமும் உள்ளது, வீட்டு மனை நிலமும் உள்ளது. பத்திரத்தில் வீட்டு மனை உள்ளதாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எனது விவசாய நிலம் அனைத்தும் ஆர்ஜிதம் செய்யப்பட்ட பிரதான சாலை ஓரமாக அமைந்துள்ளது. அதில் எனது வீடு சாலை ஓரமாக இருந்ததும் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வீட்டிற்கு இழப்பீடு

கொடுக்கப்பட்டுவிட்டது என்றால் குறைவாக கொடுக்கப்பட்டுள்ளது. என் கணவருக்கு பிறகு நான் என் மாமியாரிடம் வாங்கிய விடுதலைப்பத்திரத்தில் என் கணவருக்கு சம்மந்தப்பட்ட அனைத்து நிலங்களையும் விடுதலைப்பத்திரம் மூலம் 2013ல் நானும் என் மகனும் விடுதலைப்பத்திரம் மூலம் பெற்றுள்ளோம் என்றால் சரி. அந்த பத்திரத்தில் கிணறு பம்ப் செட்டுடன் சேர்த்து 6½ ஏக்கர் நிலம் ரூ.62,01,000/– என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரி. ஆர்ஜிதம் செய்த தேதி வரை அந்த நிலம் விவசாய நிலமாகதான் இருந்தது என்றும் அது மனை நிலமாக இருந்தது என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நில ஆர்ஜிதம் குறித்து 21.09.2017 தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் ஆம். அந்த தேதிக்கு முந்தைய 3 வருடத்திற்கான நில மதிப்பை எடுத்து அதில் அதிக பட்ச மதிப்பைக்கொண்டுதான் எனக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே இழப்பீட்டை அதிகப்படுத்தி கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் 21.9.2017க்கு 3 வருடங்களுக்கு முந்தைய ஆவணங்கள் இல்லை என்றும் எனவே நான் அதிகப்படியான இழப்பீடு கோர முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. Ex.C8 வழிகாட்டி மதிப்பீடு அறிவிப்பு தேதிக்கு பின்னிட்டது என்றால்

சரி. அந்த ஆவணத்தை எனது நிலத்தின் மதிப்பாக கருத்தில் எடுத்துக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. நிலத்தின் மதிப்பை அதிகமாக காட்டுவதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது கோரிக்கை நிராகரிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.